AHB
KR.NO.5/55/76
2

அனைத்துலக மகளிர் ஆண்டு

1354/55/76

1975



Y15
N25
181524

1975-ஆம் ஆண்டு அனைத்துலக மகளிர் ஆண்டாகும். இவ்வாண்டில் தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்ட பல்வேறு மகளிர் நல முன்னேற்றத் திட்டங்கள், ஏற்கனவே செயற் படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் ஆகியவை பற்றிய விளக்கங் களும், விவரங்களும் இக் கையேட் டில் இடம் பெற்றுள்ளன.



முதல்வரின்
சிறப்புத் திட்டம்

ஒவ்வோராண்டும் மாண்புமிகு முதல்வரவர்களின் பிறந்த நாளன்று புரட்சிகரமான சமூக நலத்திட்டங்கள் பிறக்கின்றன. அனைத்துலக மகளிர் ஆண்டான 1975-ஆம் ஆண்டில், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டு ஆதரவற்றிருக்கும் கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு முதலமைச்சர் புரட்சிகரமான சிறப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கியிருப்பது எல்லா வகையிலும் ஏற்புடையதாகும். இச்சீரிய திட்டத்தின் சிறப்புமிகு பயன்கள் :

* தையற்கலை அறிந்த ஆதரவற்ற கைம்பெண்களுக்கு ஒவ்வொன்றும் சுமார் ரூ. 600 மதிப்புடைய 1000 தையல் இயந்திரங்களை இலவசமாக வழங்குதல்.

* கதர்-கிராமத் தொழில் வாரியத்தில் வேலைவாய்ப்பு பெற 500 கைம்பெண்களுக்குப் பயிற்சி அளித்தல்.

* கைம்பெண்டிர் மறுமணத்திற்கு ஊக்கத் தொகை: தம்பதிகளுக்கு ரூ. 5,000 மதிப்புடைய தேசிய சேமிப்புப்பத்திரம் வழங்கப்படும். ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் பத்திரத் தவணைக்காலம் முடிவுறும்போது ரூ. 10,000 பெறுவர்.

* 45 வயதிற்கு மேற்பட்ட, ஆதரவற்ற கைம்பெண்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்குதல்.

சமூகநல இயக்குநர் அலுவலகம்

இந்த இயக்குநர் அலுவலகத்தில், மகளிர் நலனைக் கவனிப்பதற்காகவென்றே ஒரு பிரிவு செயற்பட்டு வருகின்றது. மகளிர் நலன் குறித்துச் செயற் படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் :

* மூன்று அரசினர் இல்லங்களிலும், அரசு உதவி பெறும் 5 சமூகப் பணி இல்லங் களிலும் ஆதரவற்ற 840 கைம்பெண் களும் 170 குழந்தைகளும் பயன்பெற்று வருகின்றனர். இங்கு மகளிருக்கு எட்டாம் வகுப்பு, பள்ளி இறுதி வகுப்பு தேர்வுகளுக்கு வகுப்புகள் நடத்தப்படு கின்றன. தையற்கலை, அலுவலகவியல் பாடமுறை ஆகியவற்றில் பயிற்சியும், இடைநிலை ஆசிரியர் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு வேலை வாய்ப்புக்களைத் தேடித்தந்து மறு வாழ்வு அளிப்பதும், அதுவரையில் இவர் களைப் பாதுகாப்பான சூழ்நிலையில் வைத்து வருவதுமே இதன் நோக்க மாகும்.

* ஏழை மகளிருக்குப் பல்வேறு கைவினைத் தொழில்களும், ஓய்வு நேரத் தொழில் களும் கற்றுத் தர 46 பணி நிலையங்கள், 9 உற்பத்திப் பிரிவுகள், 50 மகளிர் நலப் பிரிவுகள் செயற்பட்டு வரு கின்றன. இவர்கள் தங்கள் குடும்பத் திற்குக் கூடுதல் வருவாய் ஈட்டிட இது உதவுகிறது.

* சுமார் 13,000 மகளிர் மன்றங்களில், வளர்ச்சிப் பணிகளில் பங்குகொள்ளும் கிராமப்புற மகளிருக்குச் சத்துணவுக் கல்வி, தையற்கலை ஆகியவை நடப் பாண்டில் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

* குறைந்த வருமானம் பெறும் பணிமகளி ருக்கென மகளிர் நலத்துறையால் 'பணி யாற்றும் மகளிர் இல்லம்' ஒன்று நடத்தப்படுகிறது.

* மகளிர் நலனுக்கான சமூகப் பொருளா தாரத் திட்டத்தைச் செயற்படுத்த சமூகப்பணி நிறுவனங்களுக்கு மானி யங்கள் வழங்கப்படுகின்றன.

நடப்பாண்டில், தஞ்சாவூரில் உள்ள பணி இல் லத்திற்கு ரூ. 125 லட்சம் செலவில் மேலும் ஒரு கட்டடமும், கடலூரில் உள்ள பணி இல்லத்திற்கு ரூ. 2 லட்சம் செலவில் கட்டடம் ஒன்றும் கட்டப் பட்டு வருகின்றன.

மாநில சமூக நல வாரியம்

தாங்களாகவே தொண்டு புரிந்திடும் நல நிறு வனங்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்னும் தலை யாய நோக்குடன் நிறுவப்பட்டதே தமிழ்நாடு சமூக நல வாரியம். இவ்வாரியம், அத்தகைய நல் நிறு வனங்கள் மூலமாக, நலத் திட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்துகிறது. மகளிர் நலம் பேணிடக் கீழ்க்காணும் திட்டங்கள் தற்போது செயற் படுத்தப்பட்டு வருகின்றன :—

(1) மகளிர் கல்வி, பயிற்சி, மறுவாழ்வுத் திட்டங்களைத் தொடங்க அல்லது தொடங்கிய திட்டங்களை மேம்படுத்த, ஏறத்தாழ 20 மகளிர் பணி நிறுவனங்கட்கு நிதியுதவியளிக்கப்படுகின்றது.

(2). பணிபுரியும் மகளிர் இல்லங்களை நடத்தி வருகின்ற ஐந்து நிறுவனங்கட்குச் சாதனங்கள், மேற்பார்வைப் பணியாளர், பொழுது போக்கு ஆகியவற்றுக்குத் தேவையான நிதியுதவி அளிக்கப்படுகின்றது.

(3). குடும்பம்-குழந்தைகள் நலத்திட்டத்தின் கீழ், 1974-75-ஆம் ஆண்டு வரையில், கிராமப் பகுதிகளைச் சேர்ந்த 2400 மகளிருக்கு, குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் 15 நாட்களுக்கு நல்வாழ்வு, உடல்நலம், ஊட்டச்சத்து, குழந்தைகளைப் பேணல், குடும்ப நலத்திட்டம் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

(4). சமூகப் பணி நிறுவனங்கள் தாம் நடத்துகின்ற அச்சுக்கூடங்கள், தச்சுப்பட்டறைகள், ரொட்டி தயாரிப்பு நிலையங்கள் போன்ற பல்வேறு தொழிற் கூடங்களில் ஏறத்தாழ 300 மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றது.

மேற்குறிப்பிட்ட திட்டங்களைத் தவிர, நடப்பாண்டில், கீழ்க்காணும் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

(1). அனைத்துலக மகளிர் ஆண்டின் குறிக்கோள்கள் பற்றிப் பொதுமக்களின் கருத்தை ஈர்ப்பதற்காக சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் 9

மாவட்டங்கள் குறித்து 8 கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன.

(2). சென்னை மாநகரில் 8 குடிசைப்பகுதி களில் தமிழ்நாடு மகளிர் பணி நிறுவனத்தின் மூல மாக இவ்வாரியம் எட்டு முதியோர் கல்வி நிலையங் களைத் துவக்கியுள்ளது.

(3). மகளிருக்கு, அலுவலகவியற்படிப்பு, செவிலியர், உதவியாளர் படிப்பு, வானொலி இயந் திரவியல், கருவிகள் இயந்திரவியல் ஆகியவற்றில் தொழிற்பயிற்சித் திட்டத்தைத் தொடங்க மூன்று சமூகப்பணி நிறுவனங்கட்கு இவ்வாரியம் உதவி புரிந்தது.

(4). இவ்வாரியம் நடத்தும் பால்பண்ணைத் தொழில் திட்டத்தின்கீழ் 15 மகளிர் பயன்பெறு கின்றனர்.

(5). ஏறத்தாழ 75 மகளிருக்குப் பயன ளிக்கும் வகையில் மேலும் மூன்று சமூகப்-பொரு ளாதாரத் தொழிற் கூடங்கள் தொடங்கப்பட் டுள்ளன.

(6). வாழ்க்கையில் மூன்னணியில் நிற்கும் மகளிரின் வாழ்க்கைக் குறிப்புகளடங்கிய பட்டியல் ஒன்று தொகுக்கப்பட்டு வருகிறது.

(7). மைய சமூக நல வாரியம் 1975-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் டில்லியில் ஏற்பாடு செய்த தேசிய மகளிர் மாநாட்டில் இவ்வாரியம் பங்கு பெற்றது. தேசிய வளர்ச்சித் திட்டமாக, மரம் நடும்பணியை மேற்கொள்ளுமாறு மகளிருக்கு

வேலையில் அமர்த்தப் பட்டுள்ளோரின் எண்ணிக்கை:

மொத்தம்	...	35,344	21,355
மகளிர்	...	6,514	4,021

இவ்வாண்டின் இறுதி வரையில் வேலைதேடிப் பதிவு செய்துள் ளோரின் எண்ணிக்கை:

மொத்தம்	...	6,24,558	1,31,079
மகளிர்	...	1,31,079	1,56,335

31-12-74-அன்றைய நிலையில், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோரில் பெண் களின் எண்ணிக்கை, தொழில் தொகுதி வாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

தொழில்முறை பகுப்பு வகை எண்ணிக்கை

அ.	தொழில், தொழில்நுட்பத் தொடர்பான பணியாளர் ...	22,547
ஆ.	ஆட்சி, நிர்வாக மேற்பார்வைப் பணியாளர்கள்	155
இ.	எழுத்தர்களும், தொடர்பான பணியாளர்களும் ...	5,941
ஈ.	உழவர்கள், மீனவர்கள், வேட்டை யாடுவோர், மற்றும் தொடர் புள்ள பணியாளர்கள் ...	5,056
உ.	செப்பனிடு, பணி வசதிப்பணி யாளர்கள் ...	34
ஊ.	உற்பத்தி, அது தொடர்பான பணியாளர்கள். போக்குவரத்து சாதனங்கள் உரிமையாளர்கள்	824
எ.	தொழில் பிரிவின் கீழ் வராத பணியாளர்கள் ...	96,522
		1,31,079

6. காவல்துறை

மகளிர், சிறுர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளைக் கவனிப்பதற்கு ஒரு பெண் சப்-இன்ஸ்பெக்டர், ஒரு பெண் தலைமைக்காவலர், 20 பெண் காவலர்கள் ஆகியோர் உள்ளிட்ட பெண் காவலர் பிரிவு ஒன்று, சென்னை மாநகரில் 1974-75-ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது. சென்னை மாநகரில் பெண் காவலர் படைப் பிரிவு வெகு திறமையாகப் பணியாற்றி வருகிறது.

மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் பெண் காவலர் படைப்பிரிவுகள் அமைப்பது குறித்த செயற்குறிப்புகள் பரிசிலனையில் உள்ளன.

7. சீர்திருத்தப் பணித்துறை

1956-ஆம் ஆண்டு மகளிர், பெண்கள் பரத் தமைத் தொழில் தடுப்புச் சட்டத்தின் கீழ், ஒழுக்க நெறி தவறிச் சமூகத்தால் ஒதுக்கப்பட்ட பெண் களுக்காக ஒழுக்கக் கண்காணிப்பு நிறுவனங்கள் 13 அமைக்கப்பட்டன. இவற்றில் மொத்தம் 568 பேர் உள்ளனர்.

ஆதரவற்ற இளங்குற்றவாளிகளான சிறுமிய ருக்காக அரசினர் சீர்திருத்தப்பள்ளி ஒன்றும், தனியார் சீர்திருத்தப்பள்ளிகள் மூன்றும் தமிழ் நாடு சிறுர்கள் சட்டத்தின்கீழ் செயற்படுகின்றன. இவர்களுக்குக் கல்வியும் தொழிற் பயிற்சியும் அளிக் கப்படுகின்றன.

சீர்திருத்தப்பள்ளிகளிலிருந்து விடுதலை அடைந்த பெண்கள் தங்குவதற்கும் மேற்கொண்டு பயிற்சி பெறுவதற்கும் பிற்காப்பு விடுதியும், பிற்காப்பு இல்லமும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன.


RAJARATNAM

8. மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துறை

அ. கர்ப்பிணிப் பெண்டிர்க்குக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மருத்துவ சோதனை செய்யப் படுகிறது. உணவு முதலியவை பற்றி ஆலோசனை வழங்கப்படுகிறது. ரத்த சோகையுற்ற மகளிருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஆ. மகப்பேறு மருத்துவ சிகிச்சை அளிக்கப் படுகிறது. குழந்தை பிறந்த பின்னர் 10 நாட் களுக்கு அவர்களின் வீடுகளுக்குச் சென்று குழந்தை களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இ. மகப்பேறு-குழந்தை நல நிலையங்களில் தாய்மார்களுக்குக் குழந்தை வளர்ப்புக் கல்வி அளிக்கப்படுகிறது.

ஈ. மகப்பேறு-குழந்தை நல நிலையங்கள் 3,858 உள்ளன.

உ. மகப்பேறு-குழந்தை நல நிலையத்தில் 10,53,855 தாய்மார்கள் பராமரிப்புப் பெற்றனர்.

ஊ. சுகாதாரப் பார்வையாளர்கள் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. 1974-ஆம் ஆண்டில் 91 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

எ. இத்துறையிலுள்ள பெண் அதிகாரிகள் குறித்த் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

மருத்துவ அதிகாரிகள்	...	56
சுகாதாரப் பார்வையாளர் பதவிகள்	...	607
பொதுச்சுகாதாரச் செவிலியர்கள்		12
மகப்பேறு மருத்துவ உதவியாளர்கள்	...	4,385
ஆயாக்கள்.	...	2,782

9. மக்கள் நல்வாழ்வுப் பணிகள்

குடும்ப நலத் திட்டம்

குடும்ப நலத் திட்டத்தின்கீழ் பல்வேறு முறைகள் எடுத்துச் சொல்லப்பட்டு மகளிருக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. கருத்தடை வசதிகள் பொருத்தப்படுகின்றன.

மகப்பேறுக்குப் பின் சிகிச்சை அளிக்கும் திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. கருச்சிதைவு செய்வது சட்ட பூர்வமாக்கப்பட்டுள்ளது.

	1974—75	1975—76 (ஆகஸ்டு முடிய)
கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்	67,494	33,665
கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டவர்கள்	24,409	9,533
கருச்சிதைவு செய்து கொண்டவர்கள்	12,718	5,776

10. மருத்துவக்கல்வி இயக்கதம்

அ. எம்.பி.பி.எஸ். படிப்பிற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவோரின் மொத்த எண்ணிக்கையில் மகளிரின் எண்ணிக்கை 30 சதவிதம் என்று தமிழ் நாடு அரசு வரையறுத்துள்ளது. இந்த எண்ணிக்கைக்கு மேற்பட்டே மகளிர் சேர்த்துக் கொள்ளப்பட்டு வந்துள்ளனர். 1974-ஆம் ஆண்டில் இருந்த மாணவியரின் எண்ணிக்கை 335 ஆகும்.

ஆ. குறிப்பிட்ட சில பதவித் தரங்களிலுள்ள ஆடவர், மகளிரின் விகிதாசாரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	ஆடவர்	மகளிர்
துணைப்பேராசிரியர், பேராசிரியர்கள்	236	76

	ஆடவர்	மகளிர்
மருத்துவம் சாராத பேராசிரியர்கள்	56	30
மருத்துவர் சார்ந்த பேராசிரியர்கள்	179	46
மகப்பேறு மருத்துவம், பெண் நோய் மருத்துவக் கல்விப் பேராசிரியர்கள்	4	28
குழந்தைகள் மருத்துவக் கல்விப் பேராசிரியர்கள்	10	8

இ. 1960-ஆம் ஆண்டிலிருந்து பெண்கள் மட்டுமே செவிலியர் பயிற்சிக் கல்விக்குத் தெரிந் தெடுக்கப்படுகின்றனர். மொத்தமுள்ள 2,472 செவிலியர்களில் 2,290 பேர் பெண்கள். ஆடவர் மகளிரின் விகிதாசாரம் 1 : 13.

11. வேளாண்மைத்துறை இயக்ககம்

அ. தமிழ்நாட்டில் 7 உழவர் பயிற்சி நிலையங் கள் உள்ளன.

ஆ. ஒவ்வொரு தொகுதியிலும் 25 மகளிர் என்ற வகையில் பண்ணை மகளிருக்கு ஆண்டொன் றுக்கு 10 நிலையப்பயிற்சி முகாம்கள் நடத்தப்படு கின்றன. இது 4 நாள் பயிற்சியைக் கொண்ட தாகும். பல இனங்களைப் பாதுகாப்பதற்கும், எலி, பயிர்நோய் முதலியவற்றைக் கட்டுப்படுத்து வதற்குமான செய்முறை கட்புல விளக்கங்களுடன், பண்ணைச் சாகுபடியில், குறிப்பாக, பண்ணைக் கருவிகள், காய்கறி விளைவித்தல், கால்நடைப் பரா

மரிப்பு, கோழி இனவளர்ப்பு முதலிவற்றில் நவீன அறிவியல் முறைகளை, பண்ணை மகளிருக்குக் கற்றுக் கொடுக்கும் வகையில் இது அமைந்ததாகும்.

12. ஊர்வளர்ச்சித்துறை இயக்ககம்

பல்வேறு துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து வளர்ச்சிக்கு வித்திடுவது ஊராட்சி ஒன்றியமேயாகும். அங்குதான் ஆர்வத்துடன் நன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதியிலிருந்து மகளிர் மன்றங்களுக்கு நிதி உதவியளிக்கப்படுவதுடன், மகளிர் மன்றங்களைச் சார்ந்த பெண்களுக்குக் கைத்தொழிற் பயிற்சி அளித்திட கைவினைப் பயிற்சி ஆசிரியைகளும் நியமிக்கப்படுகின்றனர்.

மகளிர் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ள கைம் பெண்கள் நல்வாழ்வுத் திட்டம் முதல் பல்வேறு மகளிர் நல்வாழ்வுத் திட்டங்கள் அனைத்தும், தமிழகப் பெண்டிர்க்குப் பெருவாழ்வு நல்கிடும் புனிதத் திட்டங்களாகும். தமிழக அரசு இத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றிப் புதிய சமுதாயத்தினை அமைத்து வருகிறது.

TD
M75
18574

தமிழ்நாடு அரசு, சமூக நலத்துறை இயக்குநரால்
வெளியிடப்பட்டது.

தமிழரசு அச்சகம், சென்னை-600 002.